ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2228 - 2021 මැයි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.05.13

*2228 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1074 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1088 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, யூன் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, மே மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1071-B 82230-5,403 (2021/05)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

***5. யுத்த சேவைச் சலுகை :***

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

***7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :***

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

***8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :***

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

*பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.*

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:

(i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;

(III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.

(iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;

(v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;

(vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;

(vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;

(vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;

(ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;

(x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;

(xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;

(xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;

(xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

*பட்டதாரி மாணவ பயிலிளவல்நிலை (Cadetships)*

1. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் இரத்மலானை மற்றும் சூரியவெவ தெற்கத்திய வளாகத்தில், பட்டதாரி மாணவ பயிலிளவல்களுக்கான (Undergraduate Cadetships) பொருத்தமான தகைமையுடைய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 2021.05.10 ஆந் திகதி முதல் 2021.05.28 ஆம் திகதி வரை கோரப்படுகின்றன.

2. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ/ பொலிஸ் கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் பின்பு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் பிரகாரம் முப்படையின் அலுவலகர் மற்றும் மாணவ பொலிஸ் அலுவலகர்களாகி இலங்கை காவல்துறை மேலதிகாரி நிலையிலமர்த்தப்பட்டபின் முப்படை/பொலிஸ் நிலையில் அவர்களுக்கு பட்டங்கள் வழங்குவதற்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

3. மாணவ பயிலிளவல்கள் (Cadets) பின்வரும் பட்டதாரி பாடநெறிகளைப் பின்வரும் இடங்களில் பயில முடியும்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - இரத்மலானை.

- i. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி சிறப்புப்பட்டம் (MBBS) (5½ ஆண்டுகள்)
- ii. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4½ ஆண்டுகள்).
- iii. சட்டமாணி சிறப்புப்பட்டம் (LLB) (4½ ஆண்டுகள்)
- iv. கணினி விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4½ ஆண்டுகள்).
- v. மென்பொருள் பொறியில்மாணி சிறப்புப்பட்டம். (4½ ஆண்டுகள்).
- vi. கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4½ ஆண்டுகள்).
- vii. தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவத்துவ விஞ்ஞானமாணி பட்டம் (3½ ஆண்டுகள்).
- viii. முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி (3½ ஆண்டுகள்).
- ix. சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி (3½ ஆண்டுகள்).
- x. தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி (3½ ஆண்டுகள்).

தெற்கு வளாகம் - சூரியவெவ

- xi. கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் (5½ ஆண்டுகள்).
- xii. கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - (4½ ஆண்டுகள்)
- xiii. அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4½ ஆண்டுகள்)
- xiv. தகவல் முறையியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4½ ஆண்டுகள்)

பொலிஸ்படை மாணவ அலுவலர்களுக்கான பட்ட கற்கை பாடநெறிகள் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இரத்மலானை வளாகத்தில் இடம்பெறும்.

மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி சிறப்புப் (MBBS) பட்டம் 5½ வருடம்.

3.1. பட்டதாரி பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களின் மூன்று படைகளுக்குமான ஒதுக்கீடானது அப்படைப் பிரிவுகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் தெரிவுக்காக நடாத்தப்படும் மூன்று நேர்முகப்பரீட்சைகளில் தேருநர்கள் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் இலங்கை தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

3.2. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடிக்கின்ற பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு பிரயோகிக்கத்தக்கவாறு பின்வரும் பட்டமொன்று வழங்கப்படும்.

i. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி சிறப்புப் (MBBS) பட்டம்
ii. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்
iii. சட்டமாணி சிறப்புப்பட்டம் (LLB)
iv. கணினி விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்
v. மென்பொருள் பொறியில்மாணி சிறப்புப்பட்டம்
vi. கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்
vii. தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவத்துவ விஞ்ஞானமாணி பட்டம்
viii. முகாமைத்துவ மற்றும் தொழிநுட்ப விஞ்ஞானமாணி
ix. சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி
x. தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி
xi. கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம்
xii. கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்
xiii. அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்
xiv. தகவல் முறையியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்

3.3. சகல பட்டப்படிப்பு பாடநெறிகளும் ஆங்கில மொழியில் மாத்திரமே நடாத்தப்படும்.

3.4. தெரிவு செய்யப்படும் பயிலிளவல்கள் அவர்களின் தகைமைகளுக்கேற்ப பின்வரும் இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றைப் பயில்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

a. **மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி (MBBS) - ஐந்தரை ஆண்டுகள் (ஆண், பெண்)**

2020 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் (உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) கற்று குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளும் (C) ஒரு சாதாரண (S) சித்தி அல்லது கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று திறமைச்சித்திகள் (C) அல்லது அதற்குச் சமமான சித்திகளையுடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு தகைமைகளில் நடப்பாண்டு அல்லது அதற்கு நேர் முன்னைய ஆண்டின் (2019) உயர்தராதர பரீட்சை முடிவுகள் MBBS கற்கை நெறிகளுக்கு கருத்திலெடுக்கப்படும். எவ்வாறாயினும் கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு தகைமைகளில் நடப்பாண்டிற்கு நேர் முன்னைய ஆண்டின் (2019) உயர்தராதர பரீட்சை முடிவுகள் 17 வயதில் முடித்திருந்தால் மட்டுமே கருத்திலெடுக்கப்படும்.

b. **விமான இயந்திரவியல் /விமானம்சார் கற்கை/உயிரியல் மருத்துவம் /சிவில் /மின் மற்றும் இலத்திரனியல்/ இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு/ கடல்சார்/ பொறிமுறையெந்திரவியல்/ எந்திர இலத்திரனியல் என்பவற்றில் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண், பெண்)**

2020 அல்லது 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இணைந்த கணிதம், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) கற்று குறைந்தபட்சம் இரண்டு திறமைச் (C) சித்திகளும் ஒரு சாதாரண (S) சித்தி அல்லது கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது இரண்டு அதிதிறமைச் சித்திகள் (B) ஒரு திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான சித்திகளையுடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

c. **சட்டமாணி சிறப்புப்பட்டம் (LLB) - நான்கரை ஆண்டுகள் (ஆண்)**

2020 அல்லது 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கற்று குறைந்தபட்சம் இரண்டு திறமைச் (C) சித்திகளும் ஒரு சாதாரண (S) சித்தி அல்லது கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் மூன்று திறமைச் சித்திகள் (C) அல்லது பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண சித்திகள் பெற்றிருப்பவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

கணக்கியல், அரசறிவியல், விவசாய விஞ்ஞானம், புவியியல், உயிரியல், உயர் கணிதம், வணிக புள்ளிவிபரவியல், வரலாறு, வணிக கற்கைகள், அளவையியலும் விஞ்ஞான முறையும், இரசாயனவியல், பொருளியல்,

பௌதீகவியல், கணிதவியல்/இணைந்த கணிதம், தொடர்பாடலும் ஊடக கற்கைகளும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்.

அல்லது

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கற்று குறைந்தபட்சம் இரண்டு திறமைச் (C) சித்திகளும் ஒரு சாதாரண (S) சித்தி அல்லது கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் மூன்று திறமைச் சித்திகள் (C) அல்லது பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண சித்திகள் அல்லது ஒரு அல்லது இரண்டு பாடங்கள் மேலுள்ள பட்டியலிலிருந்தும் ஒரு அல்லது இரண்டு பாடங்கள் கீழ்வரும் பாடங்களிலிருந்தும் சித்திகளைப் பெற்றிருப்பவர்ககள் பல்கலைகழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

பௌத்தம்/ பௌத்த நாகரிகம், கிரேக்கம், தமிழ், கிறிஸ்தவம்/ கிறிஸ்தவ நாகரிகம், இந்து சமயம் / இந்து நாகரிகம், லத்தீன், கிரேக்க உரோம நாகரிகம், இஸ்லாம் /இஸ்லாமிய நாகரிகம், பிராஞ்சிய மொழி, ஜப்பான் மொழி, சீன மொழி, சிங்களம், ஆங்கிலம் (பாட எண்: 73), பாளி, அராபிய மொழி, சமஸ்கிருதம், ஜேர்மன் மொழி, விவசாய தொழில்நுட்பம், நாடகமும் அரங்கியலும்.

பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும். மேலும் பரீட்சார்த்தி க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்களத்தில்/தமிழில் திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

d. **கணினி விஞ்ஞானமாணி (B Sc) சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்)**

2020 அல்லது 2019 ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான தகுதியில் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றிலும் சித்தியுடன் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

e. **மென்பொருள் பொறியில்மாணி சிறப்புப்பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்)**

2020 அல்லது 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான தகுதியில் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றிலும் சித்தியுடன் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்

f. **கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்)**

2020 அல்லது 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான தகுதியில் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றிலும் சித்தியுடன் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

g. **தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டம் - மூன்றரை ஆண்டுகள் (ஆண், பெண்)**

*2020 அல்லது 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல், கணிதம் அல்லது வர்த்தகப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

h. **முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி - மூன்றரை ஆண்டுகள் (ஆண்)**

*2020 ஆம் அல்லது 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல், கணிதம் அல்லது வர்த்தகப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

i. **சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி (BSc) - மூன்றரை ஆண்டுகள் (ஆண், பெண்)**

*2020 ஆம் அல்லது 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எந்தவொரு கற்கைப் பிரிவிலாவது கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது கேம்பிறிட்ஜ்/பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

j. **தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி - மூன்றரை ஆண்டுகள் (ஆண், பெண்)**

*2020 ஆம் அல்லது 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எந்தவொரு கற்கைப் பிரிவிலாவது கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது கேம்பிறிட்ஜ்/பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

k. **கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் ( B Arch) - ஐந்தரை வருடங்கள் (ஆண், பெண்)**

*2020 ஆம் அல்லது 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பின்வரும் பாட்களுள் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது கேம்பிறிட்ஜ்/பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

i). *பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு பாடம் :*
*உயிரியல்*
*உயர் கணிதம்*
*இரசாயனவியல்*
*பௌதீகவியல்*
*இணைந்த கணிதம்*
*சித்திரம்*
*புவியியல்*

*அத்துடன்*

ii) *எஞ்சியிருக்கும் பாடம் /பாடங்கள் பின்வரும் பட்டியலிலுள்ளன :*

| | |
|---|---|
| *கணக்கியல்* | *அளவையியலும் விஞ்ஞான முறையும்* |
| *இந்து நாகரிகம்* | *கணிதவியல்* |
| *வணிக புள்ளிவிபரவியல்* | *சமஸ்கிருதம்* |
| *இஸ்லாமிய நாகரிகம்* | *ஜேர்மன் மொழி* |
| *கிரேக்க உரோம நாகரிகம்* | *அரபிய மொழி* |
| *அரசறிவியல்* | *வரலாறு* |
| *ஆங்கிலம் (பாட எண்: 73)* | *வியாபாரக் கற்கைகள்* |
| *சிங்களம்* | *ஜப்பான் மொழி* |

கிறிஸ்தவ நாகரிகம்
தொடர்பாடலும் ஊடக கற்கைகளும்
ஹிந்தி
பௌத்த நாகரிகம்
மனைப்பொருளியல்
சீன மொழி
பொருளியல்
பாளி
பிராஞ்சிய மொழி
தமிழ்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
விவசாய விஞ்ஞானம்

அத்துடன்

க.பொ.த (சா. த.) பரீட்சையில் கணிதத்தில் திறமைச்சித்தி அல்லது க.பொ.த (உ.த.) பரீட்சையில் கணிதத்தில் சாதாரண சித்தி அல்லது கேம்பிறிட்ஜ்/பியர்சன் எடெக்செல் சாதாரண தரத்தில் கணிதத்தில் சாதாரண (D) அல்லது அதற்குச் சமமான சித்தி

என்பதுடன்

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் நாடாத்தப்படுகிற 'வெளி அறிக்கைநிலை' எனும் பரீட்சையில் சித்தி.

l. **அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்)**

2020 ஆம் அல்லது 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான தகுதியுடன் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றிலும் சித்தியுடன் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்

m. **கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண், பெண்)**

2020 ஆம் அல்லது 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் மூன்று (3) பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

பின்வரும் பாடங்களில் ஆகக் குறைந்தது ஏதாவது ஒரு பாடத்தில் சித்தி,

இணைந்த கணிதம் / உயர் கணிதம்

அத்துடன், கீழே குறிப்பிடப்படும் பட்டியலிலிருந்து ஏனைய பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

கணக்கியல்
வியாபாரக் கற்கைகள்
தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்
பொருளியல்
பௌதிகவியல்
வணிகப் புள்ளிவிபரவியல்
இரசாயனவியல்

இத்தகைமைகளுடன் பரீட்சார்த்திகள் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் கீழே குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

கணித பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் (C) சித்தி.

அல்லது

கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் சாதாரண தரத்தில் கணிதத்தில் சித்தி (D) மற்றும் விஞ்ஞான பாடத்தில் சித்தி (D) சித்தி.

n. **தகவல் முறையியல்மாணி சிறப்புப்பட்டம்- நான்கரை ஆண்டுகள் (ஆண்)**

2019 ஆம் அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தொழில்நுட்ப துறை பிரிவு தவிர்ந்த ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

3.5. தெரிவு செய்யப்பட்ட பயிலிளவல்கள் (Cadets) அப்பாடநெறிகளுக்குரிய பொதுவான பாடங்களுக்கு மேலதிகமாக அந்தந்த பாடநெறிகளுக்கு பிரயோகிக்கத்தக்கதாக ஆங்கிலம், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், சட்டம், சர்வதேச கற்கைகள் மற்றும் இராணுவ கற்கைகள் முதலிய பாடங்களை கட்டாயமாக பயிலுதல் வேண்டும்.

3.6. அத்துடன் இவர்கள் தமது கற்கைநெறிகளின் போது உடல்வாண்மை விருத்தி, தேகாப்பியாசம், ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொள்ளுவதற்கும் வேண்டப்படுவர்.

4. (a) **பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர் பதவிக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள்**

தேருநர்கள்-

i. இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்;

ii. 2021.05.28 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்;

iii. பொதுப் பொதுவறிவுப் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் (குறைந்தது 30 புள்ளிகள்) வேண்டும்;

iv. இலங்கையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்;

v. திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் ( எந்தவொரு பயிலிளவலும் பயிற்சியின் கீழ் உள்ள காலப்பகுதியில் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதுடன் படை சேவை ஒழுங்கு விதிகளின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும் வரையும் அவர்கள் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்).

(b) **ஏனைய தேவையான தகைமைகள்**

i. அனைத்து கற்கைகளுக்கும் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியை (C) பெற்றிருத்தல் கட்டாயமானதாகும். கேம்பிறிட்ஜ்/ பியர்சன் எடெக்செல் சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியை (C) பெற்றிருத்தல்.

ii. இலங்கை வான்படைக்குரிய கல்வித் தகைமைகள். ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் என்பற்றில் திறமைச் சித்தியும் சிங்களம் அல்லது தமிழில் சாதாரண சித்தியும் அடங்கலாக ஒரு அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (மேலதிக மற்றும் தெரிவுப் பாடங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது).

iii. கேம்பிறிட்ஜ்/பியர்சன் எடெக்செல் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு தகைமைகளைக் கொண்டிருக்கிற விண்ணப்பதாரிகள் இலங்கை க.பொ.த. (சா.தரத்தில்) சிங்களம் அல்லது தமிழ் மொழியில் திறமைச்சித்தியைக் (C) கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் சமர்ப்பிக்கின்றபோது உள்நாட்டு க.பொ.த.சா. தரத்தில் தோற்றாத விண்ணப்பதாரிகள் பயிலிளவலாக/ மாணவ பொலிஸ்-அலுவலராக சேர்க்கப்பட்டு இரண்டு வருடங்களுக்குள் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் திறமைச் சித்தியைப் (C) பெறுதல் வேண்டும். இத்தேவையை குறித்த காலப்பகுதியில் பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பதாரி அவரது சேவையிலிருந்து/ இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

iv. கேம்பிறிட்ஜ்/பியர்சன் எடெக்செல் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு தகைமகளில் நடப்பாண்டு அல்லது அதற்கு நேர் முன்னைய ஆண்டின் உயர்தராதர பரீட்சை முடிவுகள் MBBS உட்பட அனைத்து கற்கை நெறிகளுக்கும் கருத்திலெடுக்கப்படும்.

(C) குறைந்தபட்சம் பின்வரும் உடல் அளவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

| | | இராணுவம் | | கடற்படை | | வான்படை | | பொலிஸ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உயரம் | MBBS | 5' 6" | 5' 3" | 168 cm | 160 cm | 5' 5" | 5' 3" | 5' 6" | 5' 3" |
| | ஏனைய பட்டங்கள் | 5' 6" | 5' 3" | | | 5' 6" | 5' 4" | - | - |
| நிறை | | 50 kg | - | 52 kg | 41kg | -- | -- | - | - |
| BMI | | - | - | - | - | <26 and> 17 | <25 and> 17 | - | - |
| மார்பு | | 32" (விரி வடையாதது) | - | 81 cm | - | 32" (Min. 81 cm) | - | 32" (Min. 81 cm) | - |

**குறிப்பு**: ஒரு விண்ணப்பதாரி U.-17/U.-19 அல்லது விளையாட்டில் தேசிய வர்ணவிருது அல்லது ஜனாதிபதி சாரணியம்/ பிரதம மந்திரி வழிகாட்டி/கீழ் பயிலிளவல் அலுவலர் (சிரேஸ்ட/கனிஸ்ட) பயிலிளவல் சார்ஜன்/நிலைகளிலான்றைக் கொண்டிருந்தால் முகாதைத்துவ சபை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இறுதி நேர்முகப்பரீட்சை குழுவினால் மேற்படி உடலளவு நியமங்கள் தளர்த்தப்படலாம்.

ஒரு விண்ணப்பதாரி தேசிய மட்ட விளையாட்டில் U-17/U-19 அவர் பின்வரும் வகையில் வென்றிருக்க வேண்டும்

தனிநபர் போட்டி- முதல்/இரண்டு/மூன்றாம் இடங்கள்

குழுநிலைப் போட்டி- வெற்றியாளர்/முதலாம் றன்னர் அப்

* க.பொ.த. உயர்தர பரீட்சையில் ஒரு விண்ணப்பதாரி 1.8 அல்லது அதற்கு மேல் இஸட் (Z) புள்ளிகளைக் கொண்டிருந்து MBBS அல்லது பொறியியல் கற்கைக்கு விண்ணப்பித்தால் ஆண்களினது உயரம் 5'4'' அல்லது அதற்கு மேலெனவும் பெண்களது உயரம் 5' 2" அல்லது அதற்கு மேலெனவும் தளர்த்தப்படும்.

* ஒரு விண்ணப்பதாரி தான்சார்ந்த சேவைத்துறையினதும் /இலங்கை பொலிஸினதும் பார்வைசார் தேவையினை பூர்த்தியாக கொண்டிருத்தல் வேண்டும்

d. **பரீட்சார்த்தி அவசியப்படும் மருத்துவ நியமங்களை உறுதிப்படுத்த வேண்டும்** - பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் தலைவருமானவரின் திருப்திக்கு ஏற்ப வேண்டப்படுத்தப்பட்ட மாதிரிக்கமைய மருத்துவப் பிரகடனப் படிவத்தை சமர்ப்பித்ததன் பின்னர், மருத்துவ சோதனையில் சித்தியடையுமாறு வெற்றிகரமான பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர். விண்ணப்பதாரியொருவர் மருத்துவப் பிரகடனப் படிவத்தில் பொய்யான தகவல்களை அளித்துள்ளார் என தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு தெரியவந்தால், அவர் தகுதியற்றவராக்கப்படுவதுடன் பொய்யான தகவல்களை வழங்கியமை எனும் விதியின் கீழ் தண்டனைக்குரியவராவார்.

மருத்துவ உறுதிமொழிப் படிவத்தினை பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

5. **சேவை நிபந்தனைகள்**.-தெரிவு செய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை அல்லது சூரியவெவ தெற்கு வளாக பயிலிளவல் (Officer Cadet) உத்தியோகத்தர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்கள் 1981 ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள் ஆகியவற்றின் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டவர்கள். சேர்த்துக் கொள்ளப்படும் தேருநர்கள் கிரமமான படைகளில் இணைப்புச் செய்யப்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான பன்னிரெண்டு (12) வருடங்களுக்கு குறையாத கட்டாயமான காலப்பகுதி சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், மருத்துவ (MBBS) பட்டத்திற்காக தெரிவு செய்யப்படுகிற பயிலிளவல்கள் அவர்கள் பட்டம் பெற்ற காலத்திலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான (20) இருபது வருட சேவையை அவர்கள் அமர்த்தப்படுகிற படைத்துறைக்கு சேவையாற்ற வேண்டும். அத்தோடு, கல்விக் காலத்தில் மருத்துவ பின்னணி மற்றும் ஏனைய காரணிகளின் நிமித்தம் விடுவிப்போருக்காக பட்டம் வழங்கப்பட மாட்டாது. மருத்துவ (MBBS) பட்டத்திற்காக தெரிவு செய்யப்படுகிற ஒரு பொலிஸ் மாணவ அலுவலர் அவர் பட்டம் பெற்ற காலத்திலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான (20) இருபது வருட சேவையை அவர்கள் இலங்கை பொலிஸில் அதிகாரி நிலையில் சேவையாற்ற வேண்டும்.

6. பல்கலைக்கழக அனுமதி செய்யும் நேரத்தில், பரீட்சார்த்திகள் மேற்கூறியபடி குறித்த பட்டத்தைப் பெற்ற பின்னர் குறித்த காலப்பகுதியில் கட்டாய சேவை செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணையொன்றையும் உடன்படிக்கையொன்றையும் செய்துகொள்ளல் வேண்டும்.

7. பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு/ மாணவ பொலிஸ் அலுவலருக்கு மாதமொன்றுக்கு அண்ணளவாக ரூ. 40,000 கொண்ட சம்பளமும் படியும் கொடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக, கட்டணமின்றி பின்வரும் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்:

(i) உணவு மற்றும் தங்குமிடம்
(ii) சீருடைகள்
(iii) அதிகாரியின் வேலையாள் வசதிகள்
(iv) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
(v) மருத்துவ வசதிகள்

8. இலங்கைத் தரைப்படை, கடற்படை, விமானப்படை/இலங்கை பொலிஸ் ஆகியவற்றின் கிரமமான படைகளுக்கு இணைப்புச் செய்யப்படுகையில், சேவைக் கொடுப்பனவு சட்டக்கோவையின் பிரகாரம் வரிசைப் பதவிக்கு பிரயோகிக்கத்தக்க சம்பளமும் படியும் அவர்களுக்கு/இலங்கை பொலிஸ் கொடுப்பனவு செய்யப்படும்.

(அ) பின்வரும் படிகள் மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும்:

(i) தகைமைப் படி
(ii) பங்கீட்டுப்படி
(iii) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடப்பட்டவர்களுக்கான படி
(திருமணமான அலுவலர்களுக்கு மட்டும்)
(iv) சீருடை பராமரிப்புப் படி

(ஆ) வேறு வசதிகளும் கொடுப்பனவுகளும்:

(i) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடும்போது இலவச தங்குமிடவசதி
(ii) வாடகை வீட்டில் வசிப்பதாயின் வரையறுக்கப்பட்ட வாடகைப்படி
(iii) சீருடைப் படி
(iv) அதிகாரியின் வேலையாள் படி

9. தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படையின் உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு முறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் பின்வரும் கட்டளைகள் கையாளப்படும்.:

(i) தரைப்படை/கடற்படை/விமானப்படை/பொலிஸின் சம்பளக் கோவை.

(ii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/ கடற்படை/ விமானப்படை/ பொலிஸ்படை உத்தியோகத்தர்களுக்கான நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள்.

(iii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/கடற்படை/விமானப் படை/பொலிஸ் படையின் நடைமுறையிலான ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் சட்டக்கோவை.

10. பயிற்சியின் காலத்தின்போது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரினால் விபரிக்கப்பட்டது போல் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தளபதிகளாலும்/அல்லது பொலிஸ் இன்ஸ்பெக்டர் நாயகத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பயிற்சியை மேற்கொள்வதற்கு பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள்/ மாணவ பொலிஸ் உத்திதயோகத்தர்கள் வேண்டப்படுவர்.

11. பயிற்சியின் கீழுள்ள பயிலிளவல் (Cadet) அலுவலர்கள் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் எந்தவொரு பகுதிக்கும் பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு பாத்திரவாளியாவார்கள்.

12. பயிற்சிபெறும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் உள்ளே வாழுமாறு வழங்கப்பட்ட இடவசதியில் வாழுமாறும், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தாபனங்களினால் முன்வைக்கப்பட்ட வழக்கமான வேலை முறையைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

13. மொழித் தேவைப்பாடுகள் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்யப்படும் ஏதாவது சட்ட ஒழுங்குவிதிகளுடன் இணங்குமாறு தெரிவு செய்யப்பட்ட தேருநர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

14. ஆளடையாளத்தை நிரூபித்தல்.- தேருநர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கான சான்றினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவார்கள். இந்நோக்கத்திற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது தபால் மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை அல்லது மோட்டார் வாகனங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்டுள்ள மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

15. விண்ணப்பங்கள் www.kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்குள் சென்று இணையநிலையில் (Online) விண்ணப்பிக்கவும்.

i. நீங்கள் www.kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்கு சென்று இணையநிலையிலேயே விண்ணப்பிக்க வேண்டும். உங்களது இலகு நன்மை கருதி பல்கலைக்கழக இணையத்தளத்தில் செய்கை வழிகாட்டப்பட்டுள்ளது. விண்ணப்ப படிவத்தைப் பூர்த்தி செய்ய பல்கலைக்கழக இணையத்தளத்தை பின்பற்றி இணையநிலையில் (online) விண்ணப்பிக்கவும். (தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

ii. விண்ணப்பதாரிகள் மீளளிக்கப்படாத ரூபா 1500.00 (இலங்கை ரூபாவில்) பணத்தினை இணையநிலையூடாக விண்ணப்ப தேவைக்கென அனுப்பி வைக்கவும். இணையநிலையில் வைப்புச்செய்ய தவறும் பரீட்சார்த்திகள் "உப வேந்தர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" சார்பில் இலங்கை வங்கி, மொறட்டுவை - இடம கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் '9405831' இற்கு வரவு வைக்கப்படுவதற்காக இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளைக்கு ரூபா 1,500.00 (ஆயிரத்து ஐந்நூறு ரூபா) தொகையினை கொடுப்பனவு செய்வதன் மூலம் தாங்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு என்பனவற்றை விண்ணப்பத்துடன் இணைத்து குறித்த முகவரிக்கு பதிவுத் தபாலில் முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

16. அடிப்படைத் தகைமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் சரிவர நிரப்பப்படாத அல்லது இத்தகவலின் நிபந்தனைகளின் பிரகாரம் இல்லாததுமான விண்ணப்பங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண்ணப்பக் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்படவும் மாட்டாது. உபவேந்தரவர்களால் நியமனம் செய்யப்படும் தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்படும் நியதிகளுக்கு இணங்க, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்திசெய்துள்ள அபேட்சகர்களிடையே பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறுவதுடன், அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் ஆரம்ப நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

17. அரசாங்க அல்லது கூட்டுத்தாபனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் தங்களது விண்ணப்பங்களை திணைக்கள/கூட்டுத்தாபன/ நிலைய தலைவரினூடாக சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் குறிப்பிட்ட பதவியிலிருந்து எப்போது விடுவிப்புச்செய்ய முடியும் என்பதையும் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரிடமிருந்து உறுதிக்கடிதம் ஒன்றையும் வழங்குதல் வேண்டும்.

18. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பாய்வு மூலப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான தரங்களை கொண்டுள்ள தேருநர்கள் மத்தியிலிருந்து பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் அவசியமெனத் தீர்மானிக்கப்படுகின்ற வேறு சோதனைகளில் பங்குபற்றுமாறு வேண்டிக் கொள்ளப்படுவார்கள். இறுதித் தெரிவானது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட இறுதி சபையினால் மேற்கொள்ளப்படும்.

19. நேர்முகப் பரீட்சைகளுக்கும் அலுவலர் தராதர சோதனைகளுக்கும் தெரிவு செய்யப்படும் தேருநர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடங்கள், நேரங்கள் மற்றும் திகதிகள் ஆகியன எழுத்து மூலம் அல்லது பல்கலைக்கழக இணையத்தளம் மூலம் அறிவிக்கப்படும். இந்நோக்கத்திற்காக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படக்கூடிய பிரயாண அல்லது வேறு செலவினங்கள் இப்பல்கலைக்கழகத்தினால் கொடுப்பனவு செய்யப்படமாட்டாது.

20. அலுவலர் தராதர சோதனை/ இராணுவ பயிற்சி என்பவற்றில் ஈடுபடும்போது ஏற்படும் காயம் முதலான எந்தவொரு பாதிப்பிற்கும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் பொறுப்பல்ல என்பதுடன் எந்தவொரு விண்ணப்பதாரியும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திடம் எந்தவொரு நஷ்ட ஈடும் கோர முடியாது அல்லது இலங்கை அரசாங்கத்திடமும் இச்சோதனைகளின் போது ஏற்படும் இழப்புக்களுக்கு நஷ்டஈடு கோர முடியாது.

21. தேருநர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு யாரேனும் ஒருவர் விரும்பினால், அவருக்கு நற்சான்றிதழ் வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். தேருநர் ஒருவரை தெரிவு செய்வதற்காக எவ்வழியிலேனும் செல்வாக்குப் பரப்புரை செய்தல் அத்தேருநருக்கான தகைமையீனமாக கருதப்படும்.

22. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி இப்பல்கலைக்கழகத்தினால் அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களின் நிராகரிப்பு பற்றிய கடிதத் தொடர்பு அல்லது விசாரணைகள் வரவேற்கப்படமாட்டாது.

23. வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் தமிழ் மொழி அறிவித்தலுக்கும் சிங்கள மொழி அறிவித்தலுக்கும் இடையே ஏதேனும் பரஸ்பர வேறுபாடுகள் ஏற்படின், சிங்கள மொழி மூலமான வர்த்தமானி அறிவித்தலைப் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

ஜெனரல் கமால் குணரத்ன (ஓய்வுபெற்ற)
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு மற்றும் எம்பில்
முகாமைத்துவ சபையின் தலைவர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல
பாதுகாப்புப் பல்கலைக்கழகம்.

5-446

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் மேன் முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2021

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் மேன் முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சேவை நிபந்தனைகள்:**

2.1 பகிரங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க மற்றும் 11.09.2018 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக்குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் 'மேன் முறையீட்டு நீதிமன்ற பதிவாளர்' நியமிக்கப்படுவார்.

2.2 அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 01/2014 இற்கு மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் 396 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது போல மேன் முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் பதவிக்குரிய அரச மொழித் தேர்ச்சியினை சேவைக்கு உள்வாங்கப்பட்டு 05 வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. **சம்பளம்** : 03/2016 மற்றும் அதற்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 24.06.2016 ஆம் திகதிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் மேன் முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் பதவிக்குரிய SL 1-2016 (மாதாந்தம்) ரூ. 47,615.00 – 10 x 1,335 – 8 x 1,630 – 17 x 2,170 – ரூ. 110,895.00 (ஆரம்ப சம்பளம் ரூ. 62,595.00) ஆகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்திற்குரியது.

5. **தகைமைகள்:**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

(ஆ) 2021.06.07 ஆந் திகதிக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

மற்றும்

(இ) உயர் நீதிமன்றத்தில் அல்லது அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரதி பதிவாளராக இருத்தல் அல்லது இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் I இல் 07 வருட உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) 07 வருடங்களுக்கு குறையாமல் செயல் திறமையுடையவாறு தொழிலில் ஈடுபட்டு வருகின்ற சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :

i. யாதேனும் அமைச்சொன்றில், அரச திணைக்களமொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அரச சட்ட வாரியமொன்றில் சட்டத்தரணியாக பதவிநிலை உத்தியோகம் ஒன்றில் அல்லது சட்டத்துறை சார் தகைமையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது சட்டக் கல்லூரியொன்றில் சட்டம் தொடர்பான ஆசிரியராக சேவையாற்றிய காலப்பகுதி செயல் திறமையுடையவாறு தொழிலில் ஈடுபட்டு வருகின்ற காலப்பகுதியாக கருதப்படும்.

ii. தற்போது பகிரங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

(உ) சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஊ) பதவிக்குறிய கடமைகளை நிறைவேற்றப்போதுமான உடல் உள ரீதியிலான தகைமையினை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** - சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 07.06.2021 ஆந் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

6. அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக் கப்பட்ட நேர்முகப்பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைவாக பதவிக்குப் பொருத்தமான ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

7. மேலே 05 (இ) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்வதினூடாக பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார். 05 (ஈ) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்வதினூடாக பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார்.

8. தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் அல்லது நியமனம் பெற்ற பதவியில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

9. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை**

விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது என கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தெரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்.

10. **விண்ணப்பிக்கும் முறை**

(அ) விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ.500. “நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்” பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் வைப்பிலிட்டுப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பதாரியின் பெயர், முகவரி எழுதப்பட்ட 9 x 4 அங்குல அளவுடைய கடித உறையுடன் பதிவுத்தபாலில் அனுப்புவதினூடாக அல்லது நேரடியாக வந்து ஒப்படைப்பதன் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை பூர்த்தி செய்யும் போது பற்றுச்சீட்டில் உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 11.06.2021 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம், கொழும்பு 12 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்திற்கு விண்ணப்பதாரி நேரடியாக வந்து ஒப்படைக்க முடியும்.

11. (அ) விண்ணப்பப்படிவத்தில் அபேட்சகரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிலிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. இவ் ஒழுங்குவிதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின் அவ்விடயங்கள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

13. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
07 ஆந் திகதி மே மாதம் 2021.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேன் முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2021**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. பிரத்தியேக தகவல்கள் :

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி ..........................................................................................
..........................................................................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்) உதாரணம் : SRIWARDANA, A.P.K.

1.2 முழுப்பெயர் : ................................................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்)

1.3 முழுப்பெயர் : ................................................................................................................................
(சிங்களத்தில் /தமிழில்)

1.4 பிரத்தியேக முகவரி (சிங்களத்தில் /தமிழில்):
..........................................................................................................................................................

1.5 பிரத்தியேக முகவரி (ஆங்கில கெபிடல் எழுத்தில்):
.......................................................................................................................
(நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதம் இம் முகவரிக்கு அனுப்பப்படும்)

1.6 பால் நிலை : ஆண் - 1 பெண் - 2 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

1.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

1.8 சமூக அந்தஸ்த்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

1.9 பிறந்த திகதி : -
ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

1.10 2021.06.07 ஆந் திகதிக்கு வயது
வருடங்கள்: [ ][ ] மாதங்கள்: [ ][ ] நாட்கள்: [ ][ ]

1.11 தொலைபேசி இலக்கம் :
நிலையானது : ........................ கையடக்க தொலைபேசி : ..............
தொலைநகல் : .....................

02. உயர் நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரதி பதிவாளராக ( அறிவித்தலின் (05 இ) தகைமையின் கீழ்) விண்ணப்பிப்பாராயின்,

2.1 தற்போதுவகிக்கும்பதவிக்குநியமனம்பெற்றதிகதி:..........................................................................

2.2 அப்பதவி நிரந்தரமாக்கப்பட்ட திகதி:..........................................................................

2.3 07.06.2021ஆந்திகதியிற்குபதவிக்காலம்:..........................................................................

2.4 சேவைக் காலத்தினுள் ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டுள்ளீரா?..........................................................

2.5 ஆம் எனின் அது தொடர்பான விபரம் :..........................................................................

2.6 உரிய காலத்திற்கான சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளீர்களா?..........................................................

2.7 உழைத்துள்ள சம்பளவேற்றங்கள் தொடர்பான விபரம் (வருடங்கள் ஒழுங்கில்)

| சம்பளவேற்றத் திகதி | சம்பளப் படிமுறை |
|---|---|
| ............................. | ............................ |
| ............................. | ............................ |
| ............................. | ............................ |
| ............................. | ............................ |

03. நீதிமன்றப் பதிவாளராக (அறிவித்தலின் (05 இ) தகைமையின் கீழ்) விண்ணப்பிப்பாராயின்,

3.1 நீதிமன்றப் பதிவாளர் தரம் I இற்கு நியமனம் பெற்ற திகதி:..........................................................................

3.2 அப்பதவி நிரந்தரமாக்கப்பட்ட திகதி:..........................................................................

3.3 07.06.2021 ஆந் திகதிக்கு நீதிமன்ற பதிவாளர் தரம் I இன் பதவிக்காலம்: ..............................................

3.4 சேவைக் காலத்தினுள் ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டுள்ளீரா?..........................................................

3.5 ஆம் எனின் அது தொடர்பான விபரம்:..........................................................................

3.6 உரிய காலத்திற்கான சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளீர்களா?..........................................................

3.7 உழைத்துள்ள சம்பளவேற்றங்கள் தொடர்பான விபரம் (வருடங்கள் ஒழுங்கில்)

| சம்பளவேற்றத் திகதி | சம்பளப் படிமுறை |
|---|---|
| ............................. | ............................ |
| ............................. | ............................ |
| ............................. | ............................ |
| ............................. | ............................ |
| ............................. | ............................ |

04. சட்டத்தரணியாக (அறிவித்தலின் (05 ஈ) தகைமையின் கீழ்) விண்ணப்பிப்பாராயின்,

4.1 சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி: ..........................

4.2 தற்போது முனைப்பாக தொழிலில் ஈடுபட்டு வருகின்ற நீதிமன்றங்கள்: ..............................

4.3 யாதேனும் அமைச்சொன்றில், அரச திணைக்களமொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அரச சட்ட வாரியமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது சட்டக் கல்லூரியொன்றில் சேவையாற்றியிருப்பின்,

4.3.1 நியமனத் திகதி:....................................

4.3.2 பதவி மற்றும் தரம்: ..............................

4.3.3 பதவி நிரந்தரமாக்கப்பட்ட திகதி:........................

4.3.4 திணைக்களம் மற்றும் தற்போதைய சேவை நிலையம்: ............................

4.3.5 சேவைக் காலத்தினுள் ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டுள்ளீரா?..........................

4.3.6 ஆம் எனின் அது தொடர்பான விபரம் : ........................

05. வேறு தகைமைகள்:

.............................................................................................................................................

06. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?
(உரிய கூட்டினுள் ( √ ) அடையாளமிடுங்கள்), (ஆம் எனின் விபரங்களை குறிப்பிடுக.)

ஆம் ☐ இல்லை ☐ ..................................................................

07. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதும் என கௌரவத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

..................... ......................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல். (தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு அவசியமற்றது)

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................. என்பவரை நான் பிரத்தியேகமான முறையில் நன்கறிவேன் என்பதனையும், எனது முன்னிலையில் ........................ திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................... ......................................
திகதி கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ............................
பதவி : .....................................................
முகவரி : ..................................................
(உத்தியோகப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)

திணைக்களத் தலைவரின் விதந்துரை

.............................................. இல் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி .......................... என்பவருக்கு மேன் முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தொழிற் தகைமைகளைக் கொண்டுள்ளார் என்பதனையும், அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும், அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் தெரிவித்து, அவரின் விண்ணப்பத்தை விதந்துரை செய்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

திகதி : திணைக்களத் தலைவரின் கையொப்பம் :
உத்தியோகபூர்வ முத்திரை :

திருத்தம்

## துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு

*2021.05.07 ஆந் திகதிய 2227 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் அறிவித்தல் இல. 05-364 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் ஊடகப் பிரிவிற்கு தற்காலிக அடிப்படையில் நியமிப்பதற்குரிய புகைப்படக் கலைஞர் உதவியாளர் பதவியில் குறிப்பிடப்பட்ட :*

"சேவை வகையீடு : PL 1 தரம் III" என்பது நீக்கப்பட்டுள்ளது.

டீ. என். ஹெட்டியாரச்சி,
*சிரேஷ்ட உதவிச் செயலாளர்.*

*2021, மே 11.*

*5-448*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

### தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார்) வகுதி - 03 சேவைத் தொகையில் செய்து காட்டுநர் (தரம் III) பதவிக்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் காணப்படுகின்ற செய்துகாட்டுநர் பதவிக்காக பின்வரும் துறைகளில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சி பெற்ற சேவைத் தொகைக்கு (PL-3-2016) ஏற்புடைய பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| துறை |
|---|
| உலோக வேலை நிபுணத்துவம் |
| மோட்டார் இயந்திர நிபுணத்துவம் |
| மின்னியல் நிபுணத்துவம் |
| கட்டட நிர்மாண நிபுணத்துவம் (அலுமினியப் பொருள் உருவமைத்தல்) |

**01. ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை :**

*அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றுக்குத் தோற்ற வேண்டியுள்ளதோடு, எழுத்துப் பரீட்சையில் சித்தயடையும் விண்ணப்பதாரிகளிடையே திறமை அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறுபவர்களில் இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு எற்ப, திறமை அடிப்படையில், நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் இணைத்துக் கொள்ளப்படுவர். இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயப் பரப்பின் கீழ் விண்ணப்பிக்கின்ற துறைக்கு ஏற்பான அறிவைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றிற்கும் பொதுஅறிவு மற்றும் மதிநுட்பத்தைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றிற்கும் சகல விண்ணப்பதாரிகளும் தோற்ற வேண்டும். இலக்கம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்.*

**02. தேவையான தகைமைகள் :**

I. *கல்வித் தகைமை.-*

*கல்விப் பொதுத் தராதர (சா.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

II. *தொழில் தகைமைகள்.-*

*மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் பதவிக்குப் பொருத்தமான துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ 4) ஆம் மட்டத்தின் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து சான்றிதழ் பெற்றிருத்தல்.*

*அல்லது*

*மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் உலோக வேலைத் தேர்ச்சி (உருக்குதல்/ஒட்டுதல்) மோட்டார் இயந்திரத் தேர்ச்சி/மின்னியல் நிபுணத்துவம்/கட்டட நிர்மாணத் தேர்ச்சி தொடர்பாக ஒரு வருட காலம் அல்லது அதற்கு அதிகமான கால பாடநெறி (முழு நேரம்/பகுதிநேரம்) ஒன்றைப் பூர்த்தி செய்து சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.*

கட்டட நிர்மாண செய்துகாட்டுநர் பதவிக்கான விண்ணப்பித்துள்ளோர்களுக்கிடையில் சில விண்ணப்பதாரிகள் அலுமினியப் பொருள் உருவமைத்தல் சம்பந்தமான திறமைகளை பெற்றிருப்பின் அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

III. *அனுபவம் .-*

தொழில்நுட்பக் கல்லூரிப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சி பெற்ற சேவைத் தொகைக்கு உரித்தான (PL - 03 - 2016) பதவி ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்று 7 வருட கால செயற்படு நிலையிலான திருப்திகரமான சேவைக்காலத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. *உடல் ரீதியான தகைமை.-*

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

V. *வேறு :*

விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்ற இறுதித் திகதிக்கு இப்பதவிகளுக்கு ஆட்சேர்த்துச் கொள்வதற்கான தகைமைகள் அனைத்தையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்து காணப்படல் வேண்டும்.

**03. சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது ஓய்வூதிய உரித்துடையது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள்/அநாதைகள், தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) நியமனமானது 1 வருட வேலை பார்த்தல் காலத்திற்கு உட்பட்டது. செய்து காட்டுநர் III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு 3 வருட காலத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப தற்போது வகிக்கின்ற பதவியில் உரிய தேர்ச்சியைப் பெற்றிருந்தாலும் இந்தப் பதவிக்கு உரித்தான ஏனைய அரச கரும மொழி தொடர்பாக குறித்த தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய ஒழுங்கு விதிகளுக்கும் இந்த நியமனமானது கட்டுப்பட்டுள்ளது.

**04. வயதெல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 25 வயதுக்குக் குறையாமல் இருப்பதோடு, உச்ச வயதெல்லை கிடையாது.

**05. சம்பள அளவு:**

2016.02.25 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இல் MTl - 2016 சம்பளக் குறியீட்டின் கீழ் இப் பதவிக்காக ரூபா 29,840.00 -10X300-11X350-10X560-10X660- ரூபா 48,890.00 ஆன மாதாந்த சம்பள அளவு உரித்தாகும். அச்சுற்றறிக்கையின் II ஆவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

**06. எழுத்துப் பரீட்சைக்கான விடயப் பரப்பு :**

| தொடர் இலக்கம் | வினாப் பத்திரத்தின் பெயர் | விடயப்பரப்பு | நேரம் | அதி கூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | பொது அறிவு மற்றும் மதி நுட்பத்தைப் பரீட்சித்தல் | சமகால நடைமுறை விடயங்கள், சமூக நிகழ்வுகள் தொடர்பான கிரகித்தல் மற்றும் சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான அறிவு மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனா சக்தி, பிரச்சினைகள் தீர்க்கின்ற ஆற்றல் மற்றும், பகுப்பாய்வு செய்வதற்கான திறமை என்பவற்றைப் பரீட்சிப்பதற்கான சுருக்க வினாத்தாள் ஆகும் | 01 மணித்தியாலம் | 100% | 40% |

| தொடர் இலக்கம் | வினாப் பத்திரத்தின் பெயர் | விடயப்பரப்பு | நேரம் | அதி கூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 02 | உலோக வேலை நிபுணத்துவம் | பொறியியல் விஞ்ஞானம், தொலைத் தொடர்பு வாய்ப்பு, தொழில்நுட்ப வரைவு, ஒட்டும் பொறிமுறைத் தேர்ச்சி (கோட்பாடு), உருக்கி இணைக்கும் வேலை | 02 மணித்தியாலம் | 100% | 40% |
| 03 | மின்னியல் நிபுணத்துவம் | மின்சார இயந்திரங்கள், மின் வலு மற்றும் தன்னியக்க கட்டுப்பாட்டுத் தொகுதி, நுண்ணியல்சார் செயலாக்கத் தொகுதி, பிரயோக மின் அளவீடு, மின் கம்பியிழுத்தல் | 02 மணித்தியாலம் | 100% | 40% |
| 04 | கட்டட நிர்மாண நிபுணத்துவம் | கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, கட்டுமாண அளவீடு, நீர் சுத்திகரிப்பு மற்றும் ் கழிவு நீர் அகற்றல், கட்டமைக்கப்பட்ட கோட்பாடு மற்றும் திட்டங்கள், அளவை அளவையிடல், அலுமினியப் பொருள் உருவமைதல் | 02 மணித்தியாலம் | 100% | 40% |
| 05 | மோட்டார் இயந்திர நிபுணத்துவம் | பொறியியல் வரைவு மற்றும் ஆக்கத் திறன், உற்பத்தித் தொழில்நுட்பவியல், இயந்ததிரப் பராமரிப்பு மற்றும் சக்தி முகாமைத்துவம், தன்னியக்க தொழில் நுட்பவியல், பெற்றோல்/டீசல் இயந்திரம், மோட்டார் வாகன மின் தொழில்நுட்பம் | 02 மணித்தியாலம் | 100% | 40% |

**07. கட்டமைக்கப்பட்டநேர்முகப்பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் :**

| புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | அதி கூடிய புள்ளித் தொகை |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| 2. மேலதிக தொழிற் தகைமைகள் | 20 |
| 3. மேலதிக அனுபவம் | 30 |
| 4. மொழித் தேர்ச்சி | 10 |
| 5. கணினி அறிவு | 10 |
| 6. நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| **மொத்தம்** | **100** |

**08. விண்ணபபதாரிகளின் ஆளடையாளங்கள் :**

சகல வகையிலும் பூர்த்தி செய்யயப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**09. விண்ணபப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள் :**

(i) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி, இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்தி செய்து, "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், த.பெ. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 07.06.2021 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணபப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "செய்துகாட்டுநர் பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும் போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 650.00 ஆக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய பகுதியில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையம், பற்றுச்சீட்டின்பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக்கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது என்பதோடு, காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(v) விண்ணப்பப்படிவங்களை, தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(vi) திணைக்களத்திலுள்ள எந்தவொரு நபரின் பெயரிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக்கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏதேனும் விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல் போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது. அதேவேளை, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றியும் அறியத்தரப்படமாட்டாது.

**10. பரீட்சை ஒழுங்கு விதிகள்:**

(i) உரிய முறையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(iii) தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு -

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழி மூலங்களில் மாத்திரமே நடைபெறும். விண்ணப்பிக்கப் படும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமையுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளிற்கு அமைய குறித்த கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதானது, தகைமைகளைக் கொண்டிருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர்.

(vii) இப்பரீட்சையானது, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பில் பரீட்சை மத்திய நிலையங்களில் நடாத்தப்படும்.

**11. போலியான தகவல்கள் வழங்கல் :**

உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிரகாரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கான அல்லது பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

எஸ்.சீ. ஜகத்,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
2021.05.03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார்) வகுதி - 03 சேவைத் தொகையில் செய்து காட்டுநர் (தரம் III) பதவிக்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021**

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் துறை | |
| விண்ணப்பிக்கும் மொழி மூலம் | |

1. விண்ணப்பதாரியின் பெயர் :
   i. முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
   ...........................................................................................................
   ...........................................................................................................

   ii. முழுப் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
   ...........................................................................................................
   ...........................................................................................................

   iii. முழுப் பெயர்: (சிங்களத்தில் / தமிழில்)
   ...........................................................................................................
   ...........................................................................................................

2. தற்போது வகிக்கின்ற பதவி :........................
   i. குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டதிகதி :
   ஆண்டு : .................. மாதம் : ....................... திகதி : ..............

   ii. விண்ணப்ப முடிவுத் திகதியன்று குறித்த பதவியில் சேவைக்காலம் :
   வருடங்கள் : .............. மாதங்கள்: .................. நாட்கள் :...........

3. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :

I. அலுவலக முகவரி : ..........
தொலைபேசி இலக்கம் : ..........

II. தனிப்பட்ட முகவரி : ..........
தொலைபேசி இலக்கம் : ..........
செல்லிடத் தொலைபேசி இலக்கம் : ..........

(முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

4. பிறந்த திகதி :
ஆண்டு : .......... மாதம் : .......... திகதி : ..........

5. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :
வருடங்கள் : .......... மாதங்கள்: .......... நாட்கள் :..........

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........

7. பால் : (ஆண்/ பெண்) : ..........

8. குடியியல் நிலைமை :
திருமணமானவர் / திருமணமாகாதவர்/ விதவை போன்றன : ..........

9. கல்வித் தகைமைகள் :
i. க.பொ.த. (சா.த.) பரீட்சை :
வருடம் : .......... பரீட்சை சுட்டிலக்கம் : ..........

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

ii. க.பொ.த. (உ.த.) பரீட்சை :
வருடம் : .......... பரீட்சை சுட்டிலக்கம் : ..........

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

10. தொழில் தகைமைகள் :

| சான்றிதழ்/டிப்ளோமா / பட்டம் அல்லது ஏனைய தகைமைகள் | ஆண்டு | தோற்றிய பாடங்கள் | பெறுபேறு | நிறுவனத்தின் / பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

11. சேவை அநுபவம் தொடர்பான விபரம்:

| சேவையாற்றியுள்ள நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரச துறை/இடைநிலை அரச துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

12. கணினித் திறமை தொடர்பாக பெற்றுள்ள தேர்ச்சிகள் :
டிப்ளோமா : ....................................
சான்றிதழ் பாடநெறி : ....................................

13. ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி :
ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி : .....................
ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி : .....................

14. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை : ....................

பணம் செலுத்திய திகதி : ................

பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இங்கே இணைக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்குவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ...................

திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் ........... தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரியில் சேவையாற்றும் திரு. / திருமதி/ செல்வி .................. அவர்கள், .................. எனும் பதவியில் பணியாற்றுவபவர் எனவும் இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லை எனவும், அதுதொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும், இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................
பணிப்பாளர்/அதிபர்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி : ................
(பதவி முத்திரை).

5-267/1

---

## திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

### தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார் வகுதி - 03) சேவைத் தொகையில் செய்து காட்டுநர் (தரம் III) பதவிக்காக (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் காணப்படுகின்ற செய்துகாட்டுநர் பதவிக்காக பின்வரும் துறைகளில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| துறை |
|---|
| உலோக வேலை நிபுணத்துவம் |
| மோட்டார் இயந்திர நிபுணத்துவம் |
| மின் தொழில்நுட்ப நிபுணத்துவம் |
| கட்டட நிர்மாண நிபுணத்துவம் (அலுமினியப் பொருள் உருவமைத்தல்) |

**01. ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை :**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றுக்குத் தோற்ற வேண்டியுள்ளதோடு, எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளிடையே திறமை அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறுபவர்களில் இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்டசைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, திறமை அடிப்படையில், நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் இணைத்துக் கொள்ளப்படுவர். இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயப் பரப்பின் கீழ் விண்ணப்பிக்கின்ற துறைக்கு ஏற்பான அறிவைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றிற்கும் பொதுஅறிவு மற்றும் மதிநுட்பத்தைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றிற்கும் சகல விண்ணப்பதாரிகளும் தோற்ற வேண்டும். இலக்கம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

**02. தேவையான தகைமைகள் :**

I. *கல்வித் தகைமைகள்.-*

*கல்விப் பொதுத் தராதர (சா.த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

II. *தொழிற் தகைமைகள் :-*

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் பதவிக்குப் பொருத்தமான துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ 5) ஆம் மட்டத்தின் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் உலோக வேலைத் தேர்ச்சி (உருக்குதல்/ ஒட்டுதல்) மோட்டார் இயந்திரத் தேர்ச்சி/ மின்னியல் நிபுணத்துவம்/ கட்டட நிர்மாணத் தேர்ச்சி தொடர்பாக ஒரு வருட காலம் அல்லது அதற்கு அதிகமான கால பாடநெறி (முழு நேரம்/ பகுதிநேரம்) ஒன்றைப் பூர்த்தி செய்து சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

கட்டட நிர்மாண செய்துகாட்டுநர் பதவிக்கான விண்ணப்பித்துள்ளோர்களுக்கிடையில் சில விண்ணப்பதாரிகள் அலுமினிய பொருள் உருவமைத்தல் சம்பந்தமான திறமைகளை பெற்றிருப்பின் அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

III. *அனுபவம் .-*

அரசாங்க அல்லது அரசாங்கதத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் உரிய துறையில் ஒரு (01) வருடத்திற்குக் குறையாத காலம் சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்.

IV. *உடல் ரீதியான தகைமை:*

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

V. *வேறு :*

* இலங்கைப் பிரசையாக இருத்தல் ;
* விண்ணப்பதாரிகள் சிறந்த குணவியல்புகளை உடையவர்களாக இருத்தல்;
* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையுளும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**03. சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

(i) இந்தப்பதவி நிரந்தரமானது ஓய்வூதிய உரித்துடையது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள்/அநாதைகள், தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) நியமனமானது 3 வருட நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டது. செய்து காட்டுநர் III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு 3 வருட காலத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப பதவியில் இருந்து ஐந்து (5) வருட காலத்தினுள், சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழியில் குறித்த மட்டத் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டியதோடு, இந்தப் பதவிக்கு உரித்தான ஏனைய அரச கருமமொழி தொடர்பாக குறித்த தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய ஒழுங்கு விதிகளுக்கும் இந்த நியமனமானது கட்டுப்பட்டுள்ளது.

**04. வயதெல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்குக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**05. சம்பள அளவு:**

2016.02.25 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இல் MTl - 2016 சம்பளக் குறியீட்டின் கீழ் இப்பதவிக்காக ரூபா 29,840.00 -10x300-11x350-10x560-10x660-48,890.00 ஆன மாதாந்த சம்பள அளவு உரித்தாகும். அச்சுற்றறிக்கையின் II ஆவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

**06. எழுத்துப் பரீட்சைக்கான விடயப் பரப்பு :**

| தொடர் இலக்கம் | வினாப் பத்திரத்தின் பெயர் | விடயப்பரப்பு | நேரம் | அதி கூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பொது அறிவு மற்றும் மதி நுட்பத்தைப் பரீட்சித்தல் | சமகால நடைமுறை விடயங்கள், சமூக நிகழ்வுகள் தொடர்பான கிரகித்தல் மற்றும் சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான அறிவு மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனை சக்தி, பிரச்சினைகள் தீர்க்கின்ற ஆற்றல் மற்றும், பகுப்பாய்வு செய்வதற்கான திறமை என்பவற்றைப் பரீட்சிப்பதற்கான சுருக்க வினாத்தாள் ஆகும் | 01 மணித்தியாலம் | 100% | 40% |
| 2 | உலோக வேலை நிபுணத்துவம் | பொறியியல் விஞ்ஞானம், தொலைத் தொடர்பு ஆற்றல், தொழில்நுட்ப வரைவு, ஓட்டும் பொறிமுறைத் தேர்ச்சி (கோட்பாடு), உருக்கி இணைக்கும் வேலை | 02 மணித்தியாலம் | 100% | 40% |
| 3 | மோட்டார் இயந்திர நிபுணத்துவம் | பொறியியல் வரைவு மற்றும் ஆக்கத் திறன், உற்பத்தித் தொழில்நுட்பவியல், இயந்ததிரப் பராமரிப்பு மற்றும் சக்தி முகாமைத்துவம், தன்னியக்க தொழில் நுட்பவியல், பெற்றோல்/ டீசல் இயந்திரம், மோட்டார் வாகன மின் தொழில்நுட்பம் | 02 மணித்தியாலம் | 100% | 40% |
| 4 | மின்னியல் நிபுணத்துவம் | மின்சார இயந்திரங்கள், மின் வலு மற்றும் தன்னியக்க கட்டுப்பாட்டுத் தொகுதி, நுண்ணியல்சார் செயலாக்கத் தொகுதி, பிரயோக மின் அளவீடு, மின் கம்பியிழுத்தல் | 02 மணித்தியாலம் | 100% | 40% |

| தொடர் இலக்கம் | வினாப் பத்திரத்தின் பெயர் | விடயப்பரப்பு | நேரம் | அதி கூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 5 | கட்டட நிர்மாண நிபுணத்துவம் | கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, கட்டுமான அளவீடு, நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் அகற்றல், கட்டமைக்கப்பட்ட கோட்பாடு மற்றும் திட்டங்கள், அளவை அளவையிடல், அலுமினிய பொருள் உருவமைதல் | 02 மணித்தியாலம் | 100% | 40% |

**07. கட்டமைக்கப்பட்டநேர்முகப்பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் :**

| புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் | அதி கூடிய புள்ளித் தொகை |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| 2. மேலதிக தொழிற் தகைமைகள் | 20 |
| 3. மேலதிக அனுபவம் | 30 |
| 4. மொழித் தேர்ச்சி | 10 |
| 5. கணினி ஆற்றல் | 10 |
| 6. நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| **மொத்தம்** | **100** |

**08. விண்ணப்பதாரிகளின் ஆளடையாளங்கள் :**

சகல வகையிலும் பூர்த்தி செய்யயப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**09. விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள் :**

(i) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி, இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்தி செய்து, “பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், த.பெ. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10” என்ற முகவரிக்கு 07.06.2021 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “செய்துகாட்டுநர் பதவிக்கான விண்ணப்பம்” என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும் போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(v) பரீட்சைக் கட்டணம் ரூபா 650.00 ஆக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய பகுதியில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும், பற்றுச்சீட்டின்பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது என்பதோடு, காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(vi) விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது, அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைத் அதிகாரி ஒருவர் 41,580 ரூபாவை (அ. நி. க. 03/ 2016 - I ஆம் அட்டவணைக்கு ஏற்ப) திரட்டிய மாதாந்த சம்பளமாகப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தாம் கடமையாற்றுகின்ற திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் மூலம் முன் வைக்கப்படல் வேண்டும்.

(viii) திணைக்களத்திலுள்ள எந்தவொரு நபரின் பெயரிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக்கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏதேனும் விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது. அதேவேளை, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றியும் அறியத்தரப்படமாட்டாது.

**10. பரீட்சை ஒழுங்கு விதிகள்:**

(i) உரிய முறையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(iii) தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு -

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழி மூலங்களில் மாத்திரமே நடைபெறும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமையுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளிற்கு அமைய குறித்த கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதானது, தகைமைகளைக் கொண்டிருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர்.

(vii) இப்பரீட்சையானது, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பில் பரீட்சை மத்திய நிலையங்களில் நடாத்தப்படும்.

**11. பொய்யான தகவல்கள் வழங்கல் :**

உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை

நிரகாரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கான அல்லது பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உண்டு.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

எஸ்.சீ. ஜகத்,
பணிப்பாளர் நாயகம்,

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
2021.05.03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார் வகுதி - 03) சேவைத் தொகையில் செய்து காட்டுநர் (தரம் III) பதவிக்காக (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021**

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் துறை | |
| விண்ணப்பிக்கும் மொழி மூலம் | |

1. விண்ணப்பதாரியின் பெயர் :
   i. முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
   ........................................................................................................................................
   ........................................................................................................................................

   ii. முழுப் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
   ........................................................................................................................................
   ........................................................................................................................................

   iii. முழுப் பெயர்: (சிங்களத்தில் / தமிழில்)
   ........................................................................................................................................
   ........................................................................................................................................

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :

   I. அலுவலக முகவரி : .............................................................................
   தொலைபேசி இலக்கம் : ......................................................................

   II. தனிப்பட்ட முகவரி : ..........................................................................
   தொலைபேசி இலக்கம் : ......................................................................
   செல்லிடத் தொலைபேசி இலக்கம் : .....................................................

   (முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :
   ஆண்டு : ............................ மாதம் : ............................ திகதி : ......................

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :
வருடங்கள் : ......................... மாதங்கள்: .......................... நாட்கள் :..............

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ...........................................................

6. பால் : (ஆண்/ பெண்) : ....................................................................................

7. குடியியல் நிலைமை :
திருமணமானவர் / திருமணமாகாதவர்/ விதவை போன்றன : ..............

8. கல்வித் தகைமைகள் :

i. க.பொ.த. (சா.த.) பரீட்சை :
வருடம் : ........... பரீட்சை சுட்டிலக்கம் : ...............

| *விடயம்* | *தரம்* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

ii. க.பொ.த. (உ.த.) பரீட்சை :
வருடம் : ........... பரீட்சை சுட்டிலக்கம் : ...............

| *விடயம்* | *தரம்* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

9. தொழில் தகைமைகள் :

| *சான்றிதழ்/டிப்ளோமா / பட்டம் அல்லது ஏனைய தகைமைகள்* | *ஆண்டு* | *தோற்றிய பாடங்கள்* | *பெறுபேறு* | *நிறுவனத்தின் / பல்கலைக்கழகத்தின் பெயர்* |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம்:

| *சேவையாற்றியுள்ள நிறுவனம்* | *பதவி* | *சேவையாற்றிய காலப்பகுதி* | *அரச துறை/இடைநிலை அரச துறை/ தனியார் துறை போன்றன* |
|---|---|---|---|
| | | | |

11. கணினித் திறமை தொடர்பாக பெற்றுள்ள தேர்ச்சிகள் :
டிப்ளோமா : ....................................
சான்றிதழ் பாடநெறி : ....................................

12. ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி :
ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி : .....................
ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி : .....................

13. நீங்கள் அரச பதவி ஒன்றினை வகித்து அதிலிருந்து பதவி நீக்கப்பட்டு உள்ளீர்களா?: .........................

14. தற்போது அரச பதவி வகிப்பவராயின் தங்களுக்கு எதிராக திணைக்களத்தினால் ஒழுக்காற்று நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டு உள்ளதா? :..............................

15. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை : ....................
பணம் செலுத்திய திகதி : ...............

பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இங்கு இணைக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்குவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

...........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ..................

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்:

இவ்விண்ணப்பத்தினை முன்வைக்கின்ற திரு. / திருமதி/ செல்வி....................................... என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்பதனையும், அவர் ....................... ஆந் திகதி என்னுடைய முன்னிலையில் அவரின் கையொப்பத்தினை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

........................
கையொப்பத்தினை உறுதிப்படுத்தும்,
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி : ...............
(பதவி முத்திரை).

(இப்பகுதி உரித்தாவது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே.)

**திணைக்களத்தின்/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

இவ் அமைச்சில், இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் கடமை புரிகின்ற திரு. / திருமதி/ செல்வி ........................ .............. தற்போது ...................... கடமை ஆற்றுகின்றார் என்பதனையும், அவரின் வேலைகள் மற்றும் நடத்தை மகிழ்ச்சிகரமானதெனவும், ஒழுக்காற்றுச் செயல்கள் எதனையும் செய்யவில்லை என்பதனையும், அது தொடர்பாக எந்தவிதமான செயல்களையும் மேற்கொள்வதற்கு எண்ணியதாகவுமில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

........................
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி : ...............
(பதவி முத்திரை).

5-267/ 2

## ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2021 யூலை

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் கொழும்பில் நடாத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. பரீட்சை நடாத்தப்படுவது சம்பந்தமாக ஆயுர்வேத ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களிற்குப் பரீட்சார்த்திகள் அமைந்தொழுகுதல் வேண்டும்.

2. இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து அனுப்புதல் வேண்டும். இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை விளக்கப் பிரமாணக் குறிப்பிற்கமைய தகைமைகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தமது விண்ணப்பப்படிவத்தினைத் தயாரித்துக் கொள்வதுடன் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை தமது நிறுவனத் தலைவரினூடாக 2021.05.28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவாறு "பதிவாளர், பரீட்சைகள் பிரிவு, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மஹரகம" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2021 யூலை " எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றும் போது எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. இருப்பினும் அதற்குப் பின்பு தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூ. 230.00 வும் ஒரு பாடத்திற்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூ. 57.50 வும் செலுத்தப்படவும் வேண்டும். இவ்வாறு செலுத்தப்பட வேண்டிய தொகையானது மஹரகம இலங்கை வங்கிக் கிளையின் கணக்கிலக்கம் 7041294 இற்கு ஆயுர்வேத ஆணையாளரின் கணக்கிற்கு வரவிடப்பட்டு பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைத்துஅனுப்பப்பட வேண்டும். எவ்வித காரணங்களின் அடிப்படையிலும் அக்கட்டணமானது மீளளிக்கப்பட மாட்டாது.

4. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் சகல பாடவேளைகளிலும் ஆயுர்வேதத் திணைக்களம் திருப்தியுறும் வகையில் தமது ஆள் அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு கீழ்க் குறிப்பிடும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

5. 2020.10.27 ஆந் திகதிற்கு முன்பு நியமனம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவராவர். (2199/10 ஆம் இலக்க 2020.10.27 ஆந் திகதிய வர்த்தமானி மூலம் மருத்துவ உத்தியோகத்தர்களின் புதிய சேவை விளக்க பிரமாணக் குறிப்பு வலுவிற்கு வருவதனால் 2020.10.27 ஆந் திகதிக்கு பின்பு நியமனம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர்களின் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையானது, அதன் பிரிவு 8.3 இற்கு ஏற்ப)

6. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு ஆயுர்வேத ஆணையாளர் மூலம் பரீட்சை நேர அட்டவணையும் அனுமதி அட்டையும் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள், தமது கையொப்பம் சரியான முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை ஆயுர்வேத திணைக்களத்தின் அனுமதி பெற்ற அதிகாரியிடம் கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டை இல்லாமல் பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்படாது. யாதேனும் ஒரு உத்தியோகத்தருக்கு பரீட்சை நடைபெறுவதற்கு குறைந்த பட்சம் 7 நாட்களுக்கு முன்பு அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில் கீழ்க் குறிப்பிடும் தகவல்களுடன் "பதிவாளர், பரீட்சைகள் பிரிவு, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம" எனும் முகவரிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(iii) விண்ணப்பதாரியின் முகவரி ;
(iv) விண்ணப்பப்பத்திரம் தபாலில் இடப்பட்ட தபால் நிலையத்தின் பெயர், பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி.

7. **பரீட்சைத் திட்டம்**.- (இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவைக்கு உரித்தான சேவை விளக்க பிரமாணக் குறிப்பிற்கேற்றவாறு).

நிதிப் பிரமாணங்கள் - கீழே குறிப்பிடப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டமைந்த வினாப்பத்திரம் ஒன்று -

(I) இலங்கைச் சனநாயக சோலிசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்களின் முதலாம் தொகுதி (10 ஆம் அத்தியாயம் தவிர)

(II) தாபன விதிக்கோவ - கீழே குறிப்பிடப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டமைந்த வினாப்பத்திரம் ஒன்று.

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் முதலாம் தொகுதியின், I, II, III, IV, V, VI, VII, VIII, XII, XIII, XIV, XXIII, XXVII, XXIX, XXX, XXXII ஆம் அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணி ஒழுங்குபடுத்தல் சட்டக்கோவை தொடர்பான அறிவு.

(ii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் இரண்டாம் தொகுதியின் XLVII மற்றும் XLVIII ஆம் அத்தியாயங்கள்.

(III) மருத்துவமனை நிர்வாகம்.- கீழே குறிப்பிடப்படும் விடயங்களை அடிப்படையாக கொண்டமைந்த வினாப்பத்திரம் ஒன்று :

(i) மருத்துவமனை தொடர்பான நடைமுறையில் உள்ள பொதுவான விதிகளும் ஒழுங்கு விதிகளும்;
(ii) மருத்துவமனையை சுத்தமாக வைத்திருத்தல் ;
(iii) நோயாளிகள் தொடர்பான நடைமுறையில் உள்ள ஒழுங்குவிதிகள் ;
(iv) நோயாளர்களுக்கு சரியான உணவு மற்றும் பானங்கள் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை;
(v) மருந்து உற்பத்தி நிலைய நிர்வாகம் ;
(vi) நோயாளிகளை அனுமதிப்பது தொடர்பான வலுவிலுள்ள சட்டதிட்டங்கள் ;
(vii) மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் தொடக்கம் ஏனைய சிற்றூழியர் வரைஅவர்களின் கடமைகள் தொடர்பாக உள்ள அறிவு;
(viii) மருத்துவமனையின் பொதுவான நிருவாக செயற்பாடுகள் ;
(ix) ஆயுர்வேத திணைக்களத்தின் பொதுவான நிருவாக நடைமுறைகள் ;
(x) ஆயுர்வேத திணைக்களத்தின் களஞ்சியசாலையின் கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் ;
(xi) ஆயுர்வேத செயல்முறைக் கோவை.

(IV) அரசகரும மொழி வாய்மொழிப் பரீட்சை.- சிங்களம்/ தமிழ் (15 நிமிடங்கள்)

(i) சிங்கள மொழிமூலம் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களுக்காக -
(அ) தமிழ் மொழியில் கேட்கப்படும் வினாக்களுக்கு தமிழ் மொழியில் விடையளித்தல்
(ஆ) தமிழ் மொழியில் கேட்கப்படும் வசனங்களை சிங்கள மொழியில் கூறுதல்
(இ) சிங்கள மொழியில் கேட்கப்படும் வசனங்களை தமிழ் மொழியில் கூறுதல்.

(ii) தமிழ் மொழிமூலம் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களுக்காக –
(அ) சிங்கள மொழியில் கேட்கப்படும் வினாக்களுக்கு சிங்கள மொழியில் விடையளித்தல்
(ஆ) சிங்கள மொழியில் கேட்கப்படும் வசனங்களை தமிழ் மொழியில் கூறுதல்
(இ) தமிழ் மொழியில் கேட்கப்படும் வசனங்களை சிங்கள மொழியில் கூறுதல்.

பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு பாடங்களிற்கும் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

குமாரி வீரசேகர,
செயலாளர்,

சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும்
ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும்
சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சு,
இல. 26, மூன்றாம் மாடி,
ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுர்வேத மருத்துவ சேவையின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2021 யூலை**

| | |
|---|---|
| சுட்டெண் : | |
| (அலுவலக உபயோகத்திற்கு மட்டும்) | |
| பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : | |
| (பொருத்தமான எழுத்தை கூட்டினுள் எழுதவும்) | |
| சிங்களம் - S, தமிழ் - T | |

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : Mr./Mrs/Miss :-----.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.
3. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.
4. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.
5. தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |
6. (i) கடமை புரியும் அலுவலகமும் விலாசமும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.
   (ii) கடமை நிலையத்திற்குரிய மாகாணம் : ----.
7. (i) கடமை புரியும் அலுவலகமும் விலாசமும் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.
   (ii) தொலைபேசி இலக்கம் :-----.
8. (i) தற்போது பதவி :
   (ii) நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :-----.
9. நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/ பாடங்கள் :

| தொடர் இல. | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. நீங்கள் இதற்கு முன்பு பரீட்சைக்கு கீழ்வரும் பாடத்திற்கோ அல்லது பாடங்களுக்கோ தோற்றி சித்தியடைந்துள்ளீர்களா ? :

நிதிப்பிரமாணம்/ தாபன விதிக்கோவை/ மருத்துவமனை நிர்வாகம்/ வாய்மொழிப் பரீட்சை (தமிழ்/ சிங்களம்) :---------
அப்படியாயின், பரீட்சைச் சுட்டெண், ஆண்டு, மாதம் என்பவற்றினைக் குறிப்பிடுக :

| பாடம் | சுட்டெண் | வருடமும் மாதமும் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

11. தாங்கள் பரீட்சைக்கு தோன்றுவது முதற்தடவையா ? :----.
பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை இல்லாதுவிடின், ஒட்டப்பட்ட கட்டணத்தின் பெறுமதி :----.
(வங்கிப் பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்).

மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க நான் உடன்படுகிறேன்.

பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் : ..................................

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி .................................................................. எனது அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ............... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

......................................................
உறுதி செய்பவரின் கையொப்பமும்
பதவி இலச்சினையும்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

5-342

## திருத்தம்

## கமநல அபிவிருத்தித் திணைக்களம்

நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய்,
வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும்
உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் II ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்வதன் பொருட்டான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2020**

01. அரச பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் PSC/EST/3/1/44/2012 ஆம் இலக்க 2021.04.07 ஆந் திகதிய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் பொருட்டான ஆட்சேர்ப்பு நடைமுறை விதியைத் திருத்தம் செய்தல் எனும் தலைப்பிலான கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தீர்மானத்திற்கமைவாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் களரீதியான / அலுவலக ரீதியான உத்தியோகத்தர் 2 சேவைத் தொகுதியின் - (MN 05 - 2006 A) பொருட்டான ஆட்சேர்ப்பின் கீழ் 7.3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை திருத்தம் செய்வதற்கும் அதன் பொருட்டு, மேற்படி பதவியின் பொருட்டான ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைக்கு மீளவும் விண்ணப்பங்களைக் கோருவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்தீர்மானத்திற்கமைவாக செயற்படும் வண்ணம் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

02. 2,200-2020 எனும் இலக்கமுடைய ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டிருந்த, 2,205-2020 எனும் இலக்கமுடைய திசெம்பர் 04 ஆந் திகதிய மற்றும் 2,213-2021 எனும் இலக்கமுடைய சனவரி 29 ஆந் திகதிய இலங்கைச் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டிருந்த திருத்தத்தின் மூலம் "கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் II ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்வதன் பொருட்டான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2020" தொடர்பிலான அறிவித்தலில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் குறிப்பிடப்பட்டிருந்த 3 ஆனது பந்தி, பின்வரும் விடயங்களுடன் பொருந்துமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

03. மேற்படி அறிவித்தலின் 3 ஆவது பந்தி :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலக்கழகமொன்றின் பட்டத்துடன், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் திணைக்களவாரியான பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதில் 5 வருட திருப்தியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராதல்.

அல்லது

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். மற்றும் கல்விப் பொதுத் தராதர பத்திர உயர் தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலேனும் (01) (பொது வினாப்பத்திரம் மற்றும் ஆங்கிலம் தவிர) சித்தியடைந்த கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவியில் அல்லது கமநல சேவை முகாமைத்துவ உதவியாளர் பதவியில் இரண்டாம் தரத்தில் 05 வருட திருப்தியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தராதல் வேண்டும் எனத் திருத்தம் செய்யப்படுகின்றது.

04. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021, மே 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**பரீட்சை தினம்** - இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் திகதியில் நடாத்தப்படும்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்** - "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (தாபன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு மட்டும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

05. அத்துடன் 2,200-2020 எனும் இலக்கமுடைய ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல், 2,205-2020 எனும் இலக்கமுடைய திசெம்பர் 04 ஆந் திகதிய மற்றும் 2,213-2021 எனும் இலக்கமுடைய சனவரி 29 ஆந் திகதிய இலங்கைச் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டிருந்த அறிவித்தல்களுக்கமைவாக விண்ணப்பித்த எந்தவொரு விண்ணப்பதாரிகளும் மீண்டும் இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கத் தேவையில்லை.

06. இந் வர்த்தமானி அறிவித்தலில் மேலே குறிப்பிடப்பட்ட 03 ஆவது மற்றும் 04 ஆவது பந்திகளுக்குரிய திருத்தங்கள் தவிர 2,200-2020 எனும் இலக்கமுடைய ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி அவ்வாறே நடைமுறையில் இருக்கும்.

ஏ.எச். எம். எஸ். அபேரத்ன,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
இல 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை,
த. பெ . 537,
கொழும்பு 07,
2021, மே 06.

5-367

---

## திருத்தம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)

2223 ஆம் இலக்க 2021, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட "முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)" என்ற பரீட்சை அறிவித்தலின் 7 (ஆ) பந்தியில் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி பின்வரும் வகையில் திருத்தியமைக்கப்படுகின்றது.

I. 7(ஆ) ஆம் பந்தியில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியை 2021.05.31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய விண்ணப்பதாரிகள் 2021.05.31 ஆந் திகதியில் பரீட்சை அறிவித்தலின் மூலம் எதிர்பார்க்கப்படும் சகல தகைமைகளையும் முழுமைப்படுத்தியிருத்தல் வேண்டும்.

II. இப்பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை என அறியத்தரப்படுகின்றது.

III. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றங்களின்றி அவ்வாறே தொடர்ந்தும் காணப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவிலுள்ள கட்டளைப் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2021, மே 06.

5-366